**செ. கு. எண்: 203** **நாள்: 26.12.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 26.12.2015

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தில் பணிபுரிந்து வந்த திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் கோட்டம், திருவொற்றியூர் தெற்கு மாடவீதியைச் சேர்ந்த திரு ஏழுமலை என்பவரின் மகன் ராமலிங்கம் என்பவர் 22.12.2015 அன்று மேற்கு மாடவீதியில் உள்ள கழிவு நீர் அகற்று நிலையத்தில் பணியில் இருந்த போது விஷ வாயு தாக்கியதில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 24.12.2015 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த திரு ராமலிங்கம் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் குடும்பதிற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**